**12.07.2023 OS. 133/2015** வா.சா.2 – பாலாயி

<u>3,4,5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் கருத்தன்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னை எனது மகள் காப்பாற்றி வருகிறாள், நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை. இந்த வழக்கில் உள்ள வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். 4ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு சொந்தமா என்ற விபரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி மூக்காயி திருமணம் செய்து சுமார் 30 வருடங்கள் இருக்கும். மூக்காயி உடன் பிறந்த தங்கை 1ம் வாதி ஆவார், 2ம் வாதி, 1ம் வாதியின் மகன் ஆவார். 2ம் வாதி சொந்த ஊரில் தான் வசித்து வருகிறார். 2ம் வாதி என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது, என்னவிதமான வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. மூக்காயி உடன் பிறந்த சகோதரி 1ம் வாதி சுமார் 26 வருடங்களுக்கு முன்பு விஸ்வநாதனை 2வது திருமணம் செய்து கொண்டார். வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறார்கள், ஆனால் சமையல் தனித்தனியாக செய்து கொள்கின்றனர். அலவாக்கோட்டை கிராமத்தில் புஞ்சை உள்ளது எனக்கு தெரியும், அதன் சர்வே எண், நான்குமால் தெரியாது. தற்போது இந்த புஞ்சை அரசு கணக்கில் யார் பெயரில் பட்டா உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. இந்த புஞ்சை நிலம் விஸ்வநாதன் சம்பாதித்த சொத்து ஆகும். பூர்வீக சொத்து கிடையாது. ஏரியூர் அருகில் உள்ள கிராமத்தில் இடம் உள்ளது, கிராமத்தின் பெயர் தெரியவில்லை. மேற்படி கிராமத்தில் விவசாய இடமும், மனை இடமும் உள்ளது. சாட்சி தானாகவே மேற்படி கிராமத்தின் பெயர் ஆபத்தரணபட்டி கிராமம் என்று சொல்கிறார். மேற்படி கிராமத்தில் மனை இடம் எத்தனை உள்ளது என்று எனக்கு தெரியாது, அதேபோல் விவசாய இடம் எத்தனை உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி மனைஇடம், விவசாய இடம் யார் பெயரில் அரசு கணக்குகளில் உள்ளது என்று சொன்னால் பூங்கோதை பெயரில் 85 செண்ட் இடம் உள்ளது. மேற்படி இடத்தில் விவசாயம் ஒரு தடவை தான் செய்வார்கள். இந்த வழக்கில் என்ன விதமான பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல்

செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. விஸ்வநாதன் கருத்தன்பட்டி கிராமத்தில் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இறந்தார். விஸ்வநாதன் இறப்பதற்கு முன்பு உயில் எதுவும் எழுதி வைத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நிலங்கள் 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் வைத்துள்ளார்கள். 3ம் பிரதிவாதியின் கணவர் லெட்சுமணன் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. 3ம் பிரதிவாதியின் கணவர் லெட்சுமணன் 1ம் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் உறவுமுறை உண்டு என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. லெட்சுமணன் உயிருடன் உள்ளாரா (அ) இறந்துவிட்டாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதியும், அவரது கணவரும் பொய்யாக ரெக்கார்டுகள் ஏற்படுத்தி உள்ளார்கள். இந்த ரெக்கார்டுகள் எத்தனை வருடத்திற்கு முன்பு ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும், அதேபோல் எவ்விதமான ரெக்கார்டுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் உள்ள 3ம் பிரதிவாதியும், அவரது கணவரும் 1ம் பிரதிவாதியிடமிருந்து உரிய பிரதிபிரயோஜனத்தின் பெயரில் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் பெற்ற விபரம் தெரியுமா என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் 3 இடங்கள் உள்ளது இதனை தவிர 1ம் வாதி, 1ம் பிரதிவாதியின் தகப்பனார் சொத்துக்கள் தனியாக உள்ளது என்று சொன்னால் சரிதான். 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் பெயரில் உள்ள ஆவணங்களோ அல்லது பட்டாவோ விசாரணைக்கு முன்பு என்னிடம் காண்பித்தார்களா என்று சொன்னால் இல்லை. நான் இந்த வழக்கில் உள்ள வாதி மற்றும் 1ம் பிரதிவாதி வேண்டுகோளுக்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.